## May 4, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. சீனாவுக்கு கழுதை இறைச்சி ஏற்றுமதி செய்ய பாகிஸ்தான் அனுமதி அளித்தது.

(i) சீன நிறுவனமான 'ஹாங்கெங்', பாகிஸ்தான் மற்றும் சீனாவில் தனது செயல்பாடுகளை கடந்த வெள்ளிக்கிழமை முதல் முழுமையாக நிறுத்திக்கொண்டதாக அறிவித்ததைத் தொடர்ந்து பாகிஸ்தான் இந்த நடவடிக்கையை மேற்கொண்டது.

(ii) இருதரப்பு பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில், பாகிஸ்தானில் சீனா-பாகிஸ்தான் பொருளாதார வழித்தடத்தை சீனா முன்னெடுத்து வருகிறது. இத்திட்டத்தின் கீழ் பாகிஸ்தானின் குவாதர் துறைமுகத்தில் இயங்கி வரும் ஹாங்கெங் நிறுவனம் அங்கு இறைச்சிக் கூடத்தை நடத்தி வருகிறது. இங்கிருந்து சீனாவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் கழுதை இறைச்சியைக் கொண்டு தோல் நோய் சிகிச்சைகளுக்கான பாரம்பரிய மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன.

(iii) இந்நிலையில், சர்வதேச உணவுப் பாதுகாப்பு தரநிலைகளைப் பின்பற்றியும், சீன சுங்கத் துறையின் விதிமுறைகளை நிறைவேற்றியும் கூட, தங்களது தயாரிப்புகளை பாகிஸ்தானில் இருந்து ஏற்றுமதி செய்வதற்கான அனுமதி தொடர்ந்து நிறுத்தி வைக்கப்பட்டதாக அந்நிறுவனம் குற்றஞ்சாட்டியது. மேலும், தங்களது செயல்பாடுகளை நிறுத்திக்கொள்வதாகவும் மே 1-ஆம் தேதி அறிவித்தது.

(iv) இதையடுத்து, பாகிஸ்தான் பிரதமர் ஷாபாஸ் ஷெரீஃப் தலைமையீட்டின்பேரில் சீனாவுக்கு கழுதை இறைச்சியை ஏற்றுமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டது. இம்மாத இறுதியில் சீனாவில் நடைபெறும் முதலீட்டாளர்கள் மாநாட்டில் பங்கேற்க ஷாபாஸ் ஷெரீஃப் செல்வார் என எதிர்பார்க்கப்படும் சூழலில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

2. ஒடிஸாவில் நடைபெறும் இண்டோர் ஓபன் தடகள போட்டியில் தமிழக வீராங்கனை பரணிகா இளங்கோவன், கம்பு ஊன்றித் தாண்டுதலில் 4.23 மீட்டரை கடந்து தேசிய சாதனையுடன் சாம்பியன் ஆனார்.

3. ஸ்பெயினில் நடைபெற்ற களிமண் தரை மாஸ்டர்ஸ் போட்டியான மாட்ரிட் ஓபனில், இத்தாலியின் யானிக் சின்னர் சாம்பியன் கோப்பை வென்றார்.

(i) 1,000 புள்ளிகள் கொண்ட 5 மாஸ்டர்ஸ் போட்டிகளில் அடுத்தடுத்து சாம்பியனான முதல் வீரராக அவர் வரலாறு படைத்தார். அதாவது, கடந்த ஆண்டு பாரீஸ் மாஸ்டர்ஸிலும், நடப்பாண்டு இண்டியன் வெல்ஸ், மியாமி மாஸ்டர்ஸ், மான்டிகார்லோ மாஸ்டர்ஸ், மாட்ரிட் ஓபன் ஆகிய போட்டிகளிலும் அவர் வாகை சூடியுள்ளார்.

(ii) டென்னிஸ் காலண்டரில் மொத்தம் 9 மாஸ்டர்ஸ் போட்டிகள் இருக்கும் நிலையில், சின்னர் தற்போது 8 போட்டிகளில் சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியிருக்கிறார். ரோம் மாஸ்டர்ஸ் மட்டும் இன்னும் அவர் கோப்பைக் கணக்கில் சேரவில்லை. அவரின் சொந்த மண்ணில் நடைபெறும் அப்போட்டி, வரும் 6-ஆம் தேதி தொடங்குவது குறிப்பிடத்தக்கது.

4. லிபுலேக் கணவாய் வழியாக கைலாஷ்-மானசரோவர் யாத்திரை மேற்கொள்ள நேபாளம் மறுப்பு தெரிவித்தது.

(i) உத்தரகண்ட் மாநிலத்தில் உள்ள லிபுலேக் கணவாய் மற்றும் சிக்கிம் மாநிலத்தில் உள்ள நாதுலா கணவாய் ஆகிய இரு பாதைகள் வழியாக வரும் ஜூன் முதல் ஆகஸ்ட் வரை கைலாஷ்- மானசரோவர் யாத்திரை நடைபெறும் என கடந்த ஏப்.30-ஆம் தேதி இந்திய வெளியுறவு அமைச்சகம் அறிவித்தது.

(ii) கைலாய மலை மற்றும் சீனாவின் திபெத் தன்னாட்சி பிராந்தியத்தில் உள்ள மானசரோவர் ஏரிக்கு மேற்கொள்ளப்படும் இந்தப் புனித யாத்திரை ஹிந்துக்கள், சமணர்கள் மற்றும் பௌத்தர்களிடையே மதரீதியாக முக்கியத்துவம் வாய்ந்தது. கல்வான் பள்ளத்தாக்கில் இந்தியா-சீனா இடையே ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து 5 ஆண்டுகளாக இந்த யாத்திரை நடைபெறாமல் இருந்தது. பின்னர் இருதரப்பு உறவை வலுப்படுத்த இரு நாடுகளும் மேற்கொண்ட முயற்சிகளையடுத்து, கடந்த ஆண்டு கைலாஷ்-மான சரோவர் யாத்திரை மீண்டும் தொடங்கப்பட்டது.

(iii) இந்நிலையில், நிகழாண்டு இந்த யாத்திரைக்கு எதிர்ப்பு தெரிவித்து நேபாள வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில், 1816-ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட சுகௌலி ஒப்பந்தத்தின்படி மகாகாளி ஆற்றின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள லிபுலேக், லிம்பியாதுரா மற்றும் காலாபானி ஆகிய பிராந்தியங்கள் நேபாளத்துக்குச் சொந்தமானவை. யாத்திரைக்கான பாதையை இறுதி செய்யும் முன் இந்தியா எங்களிடம் கலந்தாலோசிக்கவில்லை. எனவே கைலாஷ்-மானசரோவர் யாத்திரைக்கு நேபாளத்தின் லிபுலேக் கணவாய் வழித்தடத்தை அனுமதிக்க முடியாது என்பதை இந்தியா மற்றும் சீனாவிடம் மீண்டும் உறுதிப்படுத்துகிறோம்' எனத் தெரிவிக்கப்பட்டது.

(iv) செயற்கையான முறையில் தன்னிச்சையாக பிராந்தியங்களை உரிமை கோர முடியாது என நேபாளத்துக்கு இந்திய வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ரண்தீர் ஜெய்ஸ்வால் பதிலடி கொடுத்தார்.

- இதுகுறித்து செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்து அவர் மேலும் கூறுகையில், 'லிபுலேக் கணவாய் வழியாக 1954-ஆம் ஆண்டு முதல் கைலாஷ்-மானசரோவர் யாத்திரை நடத்தப்படுகிறது. இது புதிய நடைமுறை இல்லை. எல்லை விவகாரத்துக்கு நேபாளத்துடன் பேச்சு வார்த்தை மூலம் தீர்வுகாண இந்தியா தயாராகவுள்ளது' என குறிப்பிட்டார்.

5. கர்நாடக மாநிலம், பெங்களூரைச் சேர்ந்த கேலக்ஸ்ஐ எனும் புத்தாக்க நிறுவனத்தால் (ஸ்டார்ட்அப்) உருவாக்கப்பட்ட 'திருஷ்டி' செயற்கைக்கோள், அமெரிக்காவின் கலிஃபோர்னியாவில் இருந்து ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் ஃபால்கன்-9 ராக்கெட் மூலம் விண்ணில் வெற்றிகரமாக செலுத்தப்பட்டது.

(i) உலகின் முதல் 'ஆப்டோசார்' செயற்கைக்கோள் என்ற சிறப்புடைய இந்தச் செயற்கைக்கோள், புவிவட்டப் பாதையில் நிலை நிறுத்தப்பட்டதாக நிறுவனம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ii) 'அப்டோசார்' செயற்கைக்கோள் என்பது மின்-ஒளியியல் (எலக்ட்ரோ-ஆப்டிகல்) சென்சார் மற்றும் செயற்கை துளைரேடார் சென்சார் ஆகிய இரு வேறுபிம்பமாக்கல் தொழில்நுட்பங்களையும் ஒரே செயல்பாட்டுத் தளத்தில் ஒருங்கிணைக்கும் செயற்கைக்கோள் ஆகும்.

(iii) மின்-ஒளியியல் சென்சார் மூலம் சூரிய ஒளி மற்றும் தெளிவான வான் சூழலில் உயர் தெளிவுதிறன் கொண்ட புகைப்படங்களை எடுக்க முடியும். இதேபோல், செயற்கை துளை ரேடார் சென்சார் மூலம் ரேடார் துடிப்புகளைப் பயன்படுத்தி, அனைத்துக் காலநிலைகள் மற்றும் நேரங்களில் புகைப்படங்களை எடுக்கலாம்.

(iv) இது தொடர்பாக கேலக்ஸ்ஐ நிறுவனத்தின் நிறுவனரும், தலைமைச் செயல் அதிகாரியுமான சுயாஷ் சிங் வெளியிட்ட அறிக்கையில், 'எங்களின் திருஷ்டி செயற்கைக்கோள், புவிவட்டப் பாதையில் வெற்றிகரமாக நிலைநிறுத் தப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, அதன் செயல்பாட்டைத் தொடங்கும் பணிகளில் கவனம் செலுத்தி வருகிறோம். இந்த ஆப்டோசார் செயற்கைக்கோள், வழக்கமான பிம்பமாக்கல் அமைப்பு முறைகளில் உள்ள குறைபாடுகளுக்குத் தீர்வளிப்பதுடன், பலதரப்பட்ட காலச் சூழல்களிலும் சீரான மற்றும் நிலையான தரவு சேகரிப்பை உறுதி செய்யும்.

(v) இரட்டைப் பயன்பாட்டு (பொதுமக்கள்-ராணுவ ரீதியிலான பயன்பாடு) புவி கண்காணிப்பு செயற்கைக்கோள் என்ற அடிப்படையில் பாதுகாப்பு, வேளாண்மை, பேரிடர் மேலாண்மை, கடற்சார் கண்காணிப்பு, உள்கட்டமைப்புத் திட்டமிடல் உள்ளிட்ட துறைகளுக்கு உதவும்.

(vi) திருஷ்டி' திட்டத்தை 2030- ஆம் ஆண்டுக்குள் 10 செயற்கைக் கோள்களை உள்ளடக்கிய ஒரு தொகுப்பாக விரிவுபடுத்தி, இந்தியாவுக்கென வலுவான-தற்சார்புடைய புவி கண்காணிப்பு உள்கட்டமைப்பை உருவாக்குவதே எங்களின் நோக்கம்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

- இந்திய விண்வெளிக் கூட்டமைப்பின் தலைமை இயக்குநர் - ஏ.கே.பட்

6. கிளாட்மித்தோஸ் மேம்படுத்தப்பட்ட செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.) தொழில்நுட்பத்தால் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலில் இருந்து பாதுகாக்க இணையவழிப் பாதுகாப்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப மேம்பாட்டுச் செலவை அதிகரிக்க பொதுத் துறை வங்கிகள் முடிவு செய்துள்ளன.

(i) சர்வதேச அளவில் வங்கிகள், பணப் பரிமாற்றம் சார்ந்த நிதி மோசடிகள் அதிகம் நடைபெ றும் நாடுகளில் ஒன்றாக இந்தியா உள்ளது. இவை பெரும்பாலும் முதலில் அப்பாவி மக்களைக் குறிவைத்து அவர்களின் வங்கி தொடர்பான விவரங்களை மோசடியாகப் பெற்று பணத்தைப் பறிப்பதாகத் தொடங்கியது. இப்போது, எண்ம (டிஜிட்டல்) கைது, போலி 'க்யூஆர்' குறியீடு எனப்பல வழிகளில் மோசடி அதிகரித்துள்ளது.

(ii) இவை பெரும்பாலும் வங்கி வாடிக்கையாளர்களைக் குறிவைத்து நடைபெறுவதால் இது தொடர்பாக மக்களிடம் விழிப்புணர்வை மத்திய அரசு ஏற்படுத்தி வருகிறது. இந்தியாவில் வங்கிக் கணக்கு வைத்திருக்கும் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு காலகட்டத்தில் இந்த இணையவழி நிதி மோசடிக்கான அழைப்புகள், மோசடி குறுஞ்செய்திகளைப் பெற்றவர்களாகவே உள்ளனர் என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

(iii) இந்தச் சூழ்நிலையில், அமெரிக்காவின் ஆந்த்ரோபிக் நிறுவனம் உருவாக்கியுள்ள 'கிளாட்மித் தோஸ்' ஏஐ தொழில்நுட்பம் தவறாகப் பயன்படுத்தப்படும் போது அது வங்கித் துறைக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக இருக்கும் என்று

கருதப்படுகிறது.

(iv) ஏனெனில் இந்த ஏஐ தொழில் நுட்பம் இணையவழிப் பாதுகாப்பில் உள்ள சிறிய குறைபாட்டையும் கண்டறிந்து அதன் வழியாக கணினிகள் மற்றும் சர்வர்களுக்குள் ஊடுருவும் திறன்கொண்டது. இதை தேசவிரோதிகள் பயன்படுத்தினால் வங்கி வாடிக்கையாளர்களின் விவரங்களைத் திருடுவது தொடங்கி, ஒட்டுமொத்த வங்கித் துறையின் இணைய சேவை பாதுகாப்பை

கேள்விக்குறியாக்கவும் முடியும்.

(v) கிளாட் மித்தோஸ்' ஏன் ஆபத்து?

- 'கிளாட் மித்தோஸ்' ஏஐ என்பது எண்ம (டிஜிட்டல்) துறையின் சிறு தவறுகளையும் கண்டறிந்து வெளிப்படுத்துவதில் நிபுணத்துவம் பெற்றது. மென்பொருள்களில் மனிதர்களால் கண்டுபிடிக்க முடியாத மிகச்சிறிய தவறுகளையும் இதன் மூலம் கண்டறியலாம். இதுவரை மிகவும் பாதுகாப்பானது என்று தகவல்தொழில்நுட்ப உலகம் நம்பியிருந்த பல மென்பொருள் தவறுகளையும், 27 ஆண்டுகளாக கண்டுபிடிக்கப்படாமல் இருந்த பிழைகளையும் கிளாட் மித்தோஸ் கண்டறிந்துள்ளது.
- இது ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்படும் போது தொழில்நுட்பத்தை மேம்படுத்த பெரிதும் உதவியாக இருக்கும். அதே நேரத்தில் இந்த ஏஐ தவறான நபர்களால் பயன்படுத்தப்பட்டால் ஒரு கணினியைப் பயன்படுத்தி ஒட்டுமொத்த வங்கிக் கட்டமைப்பையே சீர்குலைக்கும் ஆபத்து உள்ளது. எனவேதான் இந்தியாவில் மட்டுமல்லாது சர்வதேச அளவில் இணையவழிப் பாதுகாப்பை மேம்படுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

7. உலக அளவிலும் இந்தியாவிற்குள்ளும் உள்ள வருமானம் மற்றும் செல்வத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை எடுத்துக்காட்டும் உலக சமத்துவமின்மை அறிக்கை 2026-இன் பகுப்பாய்வு.

- வருமான ஏற்றத்தாழ்வு: உலகளவில், மக்கள்தொகையில் முதல் 10% பேர், மீதமுள்ள 90% பேர் கூட்டாகச் சம்பாதிப்பதை விட அதிகமாகச் சம்பாதிக்கின்றனர். முதல் 10% பேர் தற்போது உலகின் வருமானத்தில் 53%-ஐக் கொண்டுள்ளனர்.
- செல்வக் குவிப்பு: செல்வந்தர்களில் முதல் 10% பேர் உலகளாவிய செல்வத்தில் 75%-ஐக் கொண்டுள்ளனர், இதில் முதல் 1% பேர் மட்டும் 37%-ஐச் சொந்தமாகக் கொண்டுள்ளனர். இதற்கு மாறாக, மக்கள்தொகையில் கீழ்மட்டத்தில் உள்ள 50% பேர் உலகளாவிய செல்வத்தில் வெறும் 2%-ஐ மட்டுமே கொண்டுள்ளனர்.
- கார்பன் ஏற்றத்தாழ்வு: சுற்றுச்சூழல் தாக்கமும் சமநிலையற்றதாக உள்ளது. உலகின் ஏழ்மையான 50% பேர் கார்பன் வெளியேற்றத்திற்கு வெறும் 3% மட்டுமே பங்களிக்கின்றனர், அதேசமயம் முதல் 10% பேர் 77% வெளியேற்றத்திற்குப் பொறுப்பாக உள்ளனர் (பெரும்பாலும் அவர்களின் முதலீடுகள் மற்றும் உள்கட்டமைப்பு மூலம்). முதல் 1% பேர் மட்டும் 41% கார்பன் வெளியேற்றத்திற்குப் பங்களிக்கின்றனர்.

(i) பெண்கள் மீதான தாக்கம் (பாலின சமத்துவமின்மை)

இந்த அறிக்கை குறிப்பிடத்தக்க பாலின அடிப்படையிலான பொருளாதார இடைவெளிகளை எடுத்துக்காட்டுகிறது:

- ஊதியம் பெறாத வீட்டு வேலைகளையும் சேர்த்துக் கொள்ளும்போது, பெண்கள் வாரத்திற்கு சராசரியாக 53 மணிநேரமும், ஆண்கள் 43 மணிநேரமும் வேலை செய்கிறார்கள்.
- ஊதியம் பெறாத உழைப்பைத் தவிர்த்தாலும் கூட, ஆண்களுக்கு வழங்கப்படும் மணிநேர ஊதியத்தில் பெண்கள் 61% மட்டுமே பெறுகிறார்கள். ஊதியம் பெறாத உழைப்பையும் கணக்கில் எடுத்துக் கொள்ளும்போது, பெண்களின் உண்மையான வருமான விகிதம் வெறும் 32% ஆகக் குறைகிறது.
- 1990-களிலிருந்து பெண் தொழிலாளர்களின் வருமானத்தில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஏற்படவில்லை, மேலும் அவர்களின் பணியிடப் பங்களிப்பும் கட்டுப்படுத்தப்பட்டே உள்ளது.

(ii) இந்தியாவில் சமத்துவமின்மையின் நிலை

- வருமானக் குவிப்பு: இந்தியாவில் அதிக வருமானம் ஈட்டும் முதல் 10% பேர் மொத்த தேசிய வருமானத்தில் 58%-ஐப் பெறுகிறார்கள், அதே நேரத்தில் கீழ்மட்ட 50% பேர் 15% மட்டுமே பெறுகிறார்கள்.
- செல்வ இடைவெளி: நாட்டின் செல்வத்தில் முதல் 10% பேர் 65%-ஐயும், முதல் 1% பேர் 40%-ஐயும் கொண்டுள்ளனர். மக்கள்தொகையில் கீழ்மட்ட 50% பேர் மொத்த செல்வத்தில் 6%க்கும் குறைவாகவே வைத்துள்ளனர்.

- பெண் தொழிலாளர் பங்களிப்பு: இந்தியாவில், பெண்கள் மொத்த தொழிலாளர் வருமானத்தில் 18% மட்டுமே சம்பாதிக்கின்றனர், இது 34% என்ற உலக சராசரியை விட கணிசமாகக் குறைவாகும். தொழிலாளர் சந்தையில் பெண்களின் பங்களிப்பு 15.7% என்ற குறைந்த அளவில் உள்ளது, இந்த எண்ணிக்கை கடந்த பத்தாண்டுகளில் மேம்படவில்லை.

(iii) பகுப்பாய்வு மற்றும் முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள்

- தற்போதைய கொள்கைகளின் தோல்வி: செல்வந்தர்களுக்கு வரிக்குறைப்புகளை ஆதரிக்கும் நவீன நவதாராளவாத வரிக் கொள்கைகளே, அதிகரித்து வரும் சமத்துவமின்மைக்கு ஒரு முதன்மைக் காரணம் என்று இந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.
- விளைவுகள்: இந்தக் கொள்கைகள், கல்வி, சுகாதாரம் மற்றும் காலநிலை மாற்ற சவால்கள் போன்ற அத்தியாவசிய சேவைகளுக்காகச் செலவிடும் அரசாங்கத்தின் திறனைக் குறைக்கின்றன.
- பரிந்துரைகள்: ஒரு நலன்புரி அரசாகச் செயல்பட, தேவையான வருவாயைச் சேகரிக்கவும் செல்வ இடைவெளியைக் குறைக்கவும் முற்போக்கு வரிவிதிப்பைச் செயல்படுத்த வேண்டும் என்று இந்த அறிக்கை பரிந்துரைக்கிறது.
- பல்துறை அணுகுமுறை: சமத்துவத்தை அடைவதற்குப் பொருளாதாரக் கோட்பாடு மட்டும் போதாது; அதற்கு அரசியல், மானுடவியல், சமூகவியல் மற்றும் வரலாறு ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு கூட்டு முயற்சி தேவை என்று பொருளாதார நிபுணர் தாமஸ் பிக்கெட்டி வலியுறுத்துகிறார்.
- முடிவுரை: பொருளாதார வளர்ச்சி சமூக மற்றும் பொருளாதார சமநிலையை உருவாக்கத் தவறிவிட்டது, மேலும் இந்த ஏற்றத்தாழ்வுகளைக் களையாமல், காலநிலை மாற்றம் போன்ற உலகளாவிய பிரச்சினைகளைத் தீர்ப்பது கிட்டத்தட்ட சாத்தியமற்றதாகவே இருக்கும்.